சூலை - 2011

திருவள்ளுவர் ஆண்டு 2042

# செந்தமிழ்

தொகுதி : 55
பகுதி : 9

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



பெற்றோர் ஆசிரியர் கழக நல்லிணக்கம் மற்றும் முதலாண்டு மாணவர்களுக்கான வரவேற்பின் போது...
காவல்துறை துணை ஆணையர் திரு. **அ. கணேசன்** அவர்களோடு இருபெரும் செயலாளர்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 55 திங்கள் இதழ்

பகுதி : 9 திருவள்ளுவர் ஆண்டு 2042

சூலை 2011




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பெண்ணியம் | *கிரிஜா ராகவன்* | 4 |
| கலித்தொகை உரிப்பொருளும் பண்பாட்டுச் சுவடுகளும் | *ச. கார்த்திகைராணி* | 8 |
| ஒப்பிலக்கியக் களங்கள் | *பேராசிரியர் முனைவர் து. மூர்த்தி* | 19 |
| போதுமிந்த பெண்ணின் சென்மம் ! | *கவிஞர் அ. கனகசபாபதி எம்.ஏ, பி.எட்.,* | 30 |
| சுற்றுச் சூழல் பாதுகாப்பில் தனிமனித முயற்சி | *சி. பாண்டுரங்கன்* | 31 |
| செய்தி ஊடகங்களும் மொழி பெயர்ப்பும் | முனைவர். வீ. ரேணுகா தேவி | 33 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

மிகச் சிறந்த அறிஞர் அறுவரின் கட்டுரைகளைத் தாங்கி சூலை மாதச் செந்தமிழ் தங்கள் கைகளில் தவழ்கிறது. இதழைப் புரட்டுவதற்கு முன்பு....

கோவை கிரிஜா ராகவன் அவர்கள் பரிதிமாற் கலைஞரின் பேர்த்தி ஆவார். அன்னாரின் பெண்ணியக் கட்டுரையை வழக்கமான பொதுப்பார்வையோடு படைத்திருக்கிறார்.

"அகப்பாடலுக்கு மட்டும் உரியது உரிப்பொருள்; உணர்ச்சி நெறிப்பட்ட அனுபவத்தையே உரிப்பொருளாக அகநூலார் குறித்துள்ளனர்" என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் செல்வி கார்த்திகைராணி அவர்களின் கட்டுரை அமைந்துள்ளது.

"ஒப்புமைகளைக் காண்பது தான் ஒப்பிலக்கியத்தின் அடிப்படை" என்ற நோக்கோடு ஒப்பிலக்கியக் களங்கள் எனும் அற்புதமான ஆய்வுக்கட்டுரையை அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த து. மூர்த்தி அவர்கள் தந்து துறைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

கவிதைப் பிரியர்களுக்காக "போதும் இந்தப் பெண்ணின் சென்மம்" என்ற தலைப்பில் கவிஞர் அ. கனகசபாபதி தந்துள்ள மரபுக்கவிதை மகிழ்ச்சியூட்டுகிறது. தனிமனிதனின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக என்ன முயற்சி செய்ய வேண்டும் என்பதை திரு. பாண்டுரங்கன் அவர்கள் அறிவுறுத்துகிறார். முனைவர் ரேணுகாதேவி அவர்கள் ஊடகங்களின் வழியாக வெளியிடப்படும் விளம்பரங்களில் ஒலி (ஓசை) எவ்வாறு உறழ ஒலிக்கப்படுகிறது என்பதை மொழிநூல் அறிஞர் பார்வையில் தந்து வியக்க வைக்கிறார்.

இம்மாத இதழை இனிமையாகச் சுவைத்து தங்களின் கருத்துக்களை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையில்....

**முனைவர் க. சின்னப்பா**

இனி நீங்களும் இதழும்....

# பெண்ணியம்

*கிரிஜா ராகவன்*
கோவை

*''பெண்ணிற் பெருந்தக்க யாவுள''*

*''மங்கையராகப் பிறந்திடவே மாதவம் செய்திட வேண்டுமடா''*

என்ற வரிகள் பெண்ணியத்தை பெருமைப்படுத்தும் வரிகள். திறமை, புதுமை, பெருமை என்ற இவற்றோடு, பெண்மை, தாய்மை, பொறுமை இவற்றையும் தன்னகத்தே கொண்டு, பீடு நடை போடும் பெண்கள். சமூகத்தில், பொருளாதாரத்தில், அரசியலில் என்று தன் திறமையை நிலை நாட்டியதே ''பெண்ணியம்'' என்பது ஆகும். 18ஆம் நூற்றாண்டில் இருந்து பார்த்தால், இந்த இரண்டு நூற்றாண்டுகளில் பெண்கள், எத்துணை துறைகளில் முன்னேறியுள்ளனர் என்பதைக் காணலாம்.

பழமையான இந்தியாவில் பெண்கள் ஆண்களை விட குறைந்த படிப்புடனும், வீட்டின் தேவதைகளாகவும் போற்றப்பட்டு வந்தனர். 18ஆம் நூற்றாண்டில் ''பகவான் சுவாமி நாராயணன்'' என்பவரின் முயற்சியால் பெண்கள் முன்னேறினர். பெண்கள் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்ட சுவாமி நாராயணன் பெண்களைச் சத்சங்கத்தில் சேர்த்துப் பெண்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்தார். பெண்களுக்கு, தன்னம்பிக்கை வர வேண்டும் என்று அரும்பாடுபட்டார். ஏறத்தாழ 25 ஆண்டுகள் கழித்து, பெண்கள் படிப்பு, வேலை என்று தன் திறமைகளை வளர்த்துக் கொண்டனர்.

வேத காலத்தில், சங்க காலத்தில் ஆண்களுக்கு ஈடாக பெண்களும் படித்து முன்னேறினர். கம்பரின் பாட்டிற்கு ஈடாகப் பதில் பாட்டைக் கொடுத்த ஔவையாரை மறக்க முடியுமா? உதாரணத்திற்கு, கம்பர் ஔவையாரிடம் ''ஒரு கால் நாலிலைப் பந்தலடி'' என்று சொல்லி பொருளைக் கூறுமாறு கேட்டார் அத்தொடரில் ''அடி'' என்பது தன்னை இழிவாக விளிப்பதுப் போல் இருந்ததால், ஔவையாரும் பதிலுக்கு,

*"எட்டே கால் லட்சணமே எமன் ஏறும் பரியே*
*மட்டில் பெரியம்மை வாகனமே - முட்டமேல்*
*கூரையில்லா வீடே! குலராமன் தூதுவனே*
*ஆரையடா சொன்னாய் அது"*

என்று இரு பொருள்பட அதாவது நீ கூறியது "ஆரைக் கீரையைக் குறிக்குமடா" என்றும், நீ யாரைப் பார்த்து சொன்னாயடா என்றும் பொருள்படும். அரசவையில் காக்கைப் பாடினியார், ஔவையார் போன்ற பெண் பாற் புலவர்கள் அவையை அலங்கரித்தனர் என்பதற்குச் சங்ககால இலக்கியங்களே சான்று. சங்க காலம் முடிந்து பெண்களின் முன்னேற்றம் 19ஆம் நூற்றாண்டில் சிறிது தடைப்பட ஆரம்பித்தது. 'பெண் விடுதலை' என்று பேசும் நாம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் தான் வளைய வருகிறோம். 'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை'; "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" என்ற காலம். பாரதியாரின் பாடல்களினால் விழித்தெழுந்த பெண்கள், காலச் சக்கரத்தில், மனதளவிலே உறுதி பெற்று படிப்பதிலும், எழுதுவதிலும் திறமை பெற்று விளங்கினர். உதவியது கல்வி நிலையங்கள். கல்லூரியை எட்டிப் பார்த்த கன்னிகைகள், ஆசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும் பிரகாசித்தனர். வெளி உலகுக்கு பெண்களின் திறமை தெரிந்தது.

பெண் குழந்தைகளை எருக்கம்பால் ஊட்டியும், பால் நிறைந்த பானையில் பச்சிளம் குழந்தையைப் போட்டு கொல்லவும் துணிந்தனர் மக்கள். வரதட்சணை கொடுமைக்குப் பயந்து, பெண் குழந்தை என்றால் வேண்டவே வேண்டாம் என்று கருவிலே குழந்தையை அழிக்கவும் செய்தனர்.

இந்த நிலை மாறி பெற்றோர்களும், பெண்களின் திறமையைக் கண்டு வியந்து, பச்சைக் கொடி காட்டி மேன் மேலும் திறமைகளை வளர்த்துக் கொள்ள ஊக்குவித்தனர்.

பெண்களுக்கு விடுதலை வேண்டும் என்று பாரதியார் "பெண் விடுதலையில்,

*பெண்ணுக்கு விடுதலை நீரில்லையென்றால்*
*பின்னிந்த வுலகினிலே வாழ்க்கையில்லை"*

என்று சுட்டிக் காட்டியுள்ளார். சுதந்திரத்திற்குப் பிறகு பெண்கள் கட்டாயம் கல்வி கற்க வேண்டும் என்று பெண்களுக்கு கட்டாயக் கல்வித் திட்டத்தை கொண்டு வந்தது இந்திய அரசு.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதி இல்லையே" என்ற பாரதியாரின் கூற்றுப்படி அச்சமின்றி முன்னேறினர் பெண்கள்.

*"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்தக் கண்டோம்"*

என்பதை நிரூபித்தனர் பெண் குலம். இந்த 20ஆம் நூற்றாண்டில் பெண்கள் இல்லாத துறையே இல்லை என்று சொல்லலாம். எதிலும் பெண்கள், எங்கும் பெண்கள் என்று பெண்களின் திறமையைக் காண முடிகிறது. செங்கல் அடுப்பில் இருந்து, ஸ்டவ் அடுப்பு, காஸ் அடுப்பு, மின்சார அடுப்பு என்று மாறிவரும் யுகத்தில் தன்னையும் மாற்றிக் கொண்டு தன் திறமையை வெளி உலகுக்கு உணர்த்திய பெண்களை என்னவென்று சொல்வது? பெண்ணியத்தின் அழகு என்பதா அல்லது பெண் திறமையின் வலிமை என்பதா?

*"வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்*
*சந்திர மண்டலம் கண்டு தெளிவோம்"*

என்பதைப் பெண்களின் திறமையை, வலிமையை உண்மையாக்கினர் சுனிதா வில்லியம்ஸ், கல்பனா சாவ்லா போன்றோர் இந்த கணிணி யுகத்தில் "ஆணுக்குப் பெண் இங்கு இளைப்பில்லை காண்" என்பது போல் ஜீன்ஸ் என்ன? டி சர்ட் என்ன? கையில் கை பேசி என்ன? இத்துடன் இரண்டு சக்கர வாகனத்தில் வரும் அழகைக் கூறவும் வேண்டுமோ?

அன்பு, அறிவு, அழகு என்ற மூன்று வார்த்தையைத் தன்னகத்தே கொண்ட பெண்கள் திறமைசாலியாய் இருப்பதில் வியப்பில்லை. பெண்கள் பொறுமையில் பூமாதேவி போலவும், தயை என்ற பண்பைத் தன்னகத்தே கொண்டவர்களாகவும், எண்ணங்களை வெளியிடுவதில் அமைச்சர்கள் போலவும் விளங்குகின்றனர் என்று தனது பாடலில் தெரிவித்துள்ளார் பாரதிதாசன் அவர்கள். என்னே பெண்ணின் பெருமை?

ஏழ்மை, பசிக் கொடுமை, இவைகள் யாவும் அழிந்து வருவது பெண் கல்வியினால் தான். ஒரு பெண் படித்தால், ஒரு குடும்பம் மட்டும் அல்ல அந்த நாடே உயர்ந்து விடும். அதனால்தான் ''பெண்கள் நாட்டின் கண்கள்''; பெண்ணின் பெருமை இந்த மண்ணின் பெருமை என்றும் கூறப்படுகிறது. நமது பெண்கள் நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும் உடைய புரட்சிப் பெண்ணாகவும், புதுமைப் பெண்ணாகவும் விளங்குகின்றனர் என்பதற்கு அவர்கள் சார்ந்துள்ள துறைகளே எடுத்துக் காட்டு.

*"Mother is our Health*
*Mother is our book*
*Mother is our knowledge*
*Mother is our teacher"*

என்பது தான் உண்மை. ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருக்கிறாள். ஒவ்வொரு குழந்தையின் முன்னேற்றத்திற்குப் பின்னும் பெண் தான் இருக்கிறாள்.

***"There is a woman behind every man"*** என்ற பழமொழி இதை உறுதிப்படுத்துகிறது, ''பெண்மையே வாழ்க'' என்று ஆடுவோமடா, ''பெண்ணியம் வளர்க என்று பெருமையுடன் கூறுவோமடா.

# கலித்தொகை உரிப்பொருளும் பண்பாட்டுச் சுவடுகளும்

*ச. கார்த்திகைராணி*
சிவகாசி

மனிதனின் வாழ்க்கை நிகழ்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவது அவனுடைய மன உணர்வுகள் எனலாம். உணர்வுகளின் வெளிப்பாடே இலக்கியங்கள். எனவேதான் அகப்பொருட்கும் இம்மன உணர்வுகள் உயிர்நாடியாகத் திகழ்கின்றன. அகஇலக்கியங்கள் உணர்வினை உரிப்பொருளாகக் காணுகின்றது. சங்க இலக்கியத்தில் உணர்வுப் பதிவுகள் அனைத்தும் பண்பாட்டுச் சுவடுகள் எனவாம். சங்க மாந்தர்களின் மன உணர்வுகள் புணர்தல், பிரிதல், இருத்தல் ஊடல், இரங்கல் என்னும் பண்புகளாகப் படைத்துக் காட்டப்படுகின்றன. இப்பண்புகளைத் தமிழிலக்கண மரபு 'உரிப்பொருள்கள்' என்று பெயரிட்டுள்ளன. இத்தகைய உரிப்பொருள் கலித்தொகைப் பாடல்களில் எவ்வாறு பண்பாட்டு நிகழ்வாகின்றன என்பதை ஆய்ந்து காண்பதே இவ்வியலின் நோக்கமாகும்.

## உரிப்பொருள்

''உரிப்பொருள் அகத்திற்கு உரிமையுடையது உணர்ச்சி நெறிப்பட்ட அனுபவத்தை அகநூலார் உரிப்பொருள் எனக் குறித்தனர்.''

உரிப்பொருள் என்பதற்கு வாழ்வியற் களஞ்சியம், உரிப்பொருள் என்பது நிலம் பொழுதாலாகும். உலகில் கருக் கொண்டு தோன்றும் பொருள்களின் துணையோடு, மக்கள் பிற உயிர்களின் வாழ்வினும் வேறாய் உயர்ந்த வாழ்வினை வாழ்வதற்காக மேற்கொள்ளப்பெறும். ஒழுகலாறுகளையும் குறிப்பிடுகின்றனர்.'' இவ் உரிப்பொருள் நிலத்திற்கேற்ப மாறுபடும் தன்மையது எனக் கூறும் தொல்காப்பியம், அதனை,

*“புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்*
*ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை*
*தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே”*

என்று குறிப்பிடுகிறது. சங்க இலக்கிய உணர்வுகள் ஆண், பெண் இருவருக்கும் பொதுவானது. தொல்காப்பியரின் உரிப்பொருள் கோட்பாட்டை உரையாசிரியர்கள்,

*குறிஞ்சி – புணர்தலும் புணர்தல் நிமித்தமும்*
*முல்லை – இருத்தலும் இருத்தல் நிமித்தமும்*
*மருதம் – ஊடலும், ஊடல் நிமித்தமும்*
*நெய்தல் – இரங்கலும் இரங்கல் நிமித்தமும்*
*பாலை – பிரிதலும் பிரிதல் நிமித்தமும்*

என்று குறித்துள்ளனர்.

குறிஞ்சியில் புணர்தல் அமைத்ததற்கான காரணங்களை மா. இராசமணிக்கம் கூறுகையில், “மலைவாணரிடம் இவ்வொழுக்கம் பெரும் வழக்கமாயின்மைக் கொண்டு தொல்லாசிரியன்மார் குறிஞ்சி புணர்ச்சியை அமைந்தனர் என்பார்.”

உரிப்பொருள் என்பது புணர்தல், பிரிதல், ஊடல், இருத்தல், இரங்கல் ஆகியவற்றையும் அவற்றுக்கான நிமித்தங்களையும் கொண்டது. ஆனால் தொல்காப்பியர் இவ்வுரிப்பொருள் எத்திணைக்கு வரும் எனக் குறிப்பிட்டுக் கூறவில்லை. எனினும் உரையாசியரியர் இவற்றை முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல் மருதம் என்பவனவற்றிற்கு உரியனவாக்குகின்றனர்” என்பார் தமிழண்ணல். உரிப்பொருளைத் தலைமையாகவும், பிற இரண்டைத் துணைமையாகவும் கொள்ளலே இலக்கிய நீதி” என்று க.ப. அறவாணனும் உரிப்பொருளுக்கு முதன்மை தருகின்றார்.

உரிப்பொருளும் சங்ககால மக்களின் பண்பாட்டினை அறிய உதவும் என்று பல்வேறு அறிஞர்கள் கருத்துரைக்கின்றனார். “இன்வரைவியல் என்பது, ஒரு தனிப்பட்ட, சமூகத்தின் பண்பாட்டை முழுமையாகப் புரிந்து கொண்டு அவற்றை முறையாகத் தொகுத்து வழங்குதலாகும். இவ்இனவரைவியலின் தலையாய நெறி பண்பாட்டுக் கூறுகளின் உறவுகளைச் சரியாகப் புரிந்து கொள்ளவும், அவற்றை

நடுநோக்கில் விளக்குவதுமாகும். சிலநூறு ஆண்டு சரித்திரம் கொண்ட இவ்இனவரைவியல் துறையறிவைத் தொல்காப்பியர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பெற்றிருந்தார் என்பதற்கு அவர் வகுத்துக் கொடுத்துள்ள திணைப்பாகுபாடும், முதல், கரு, உரிப்பொருள்கள் பாகுபாடும் சான்றாக உள்ளன'' பண்டைய மக்கள் வாழ்ந்த உயர்ந்த வாழ்க்கை நெறியே அவர்களின் ஒழுக்கத்தைப் பறைசாற்றுகின்றன. எல்லா உயிர்க்கும் இயல்பாக இருந்து வருகின்ற இயற்கை இன்ப உணர்ச்சிகள் உரிப்பொருளாகும்.

கலித்தொகைத் தலைவன் தலைவியின் மன உணர்வுகள் அவ் இலக்கியம் நெடுக பின்வறுமாறு அமைக்கப்பட்டுள்ளன.

*குறிஞ்சி - கூடல்*

*பாலை - பிரிவு*

*மருதம் - ஊடல்*

*முல்லை - இருத்தல்*

*நெய்தல் - இரங்கல்*

இவற்றின் வழியே பண்பாட்டுச் சுவடுகளும் வெளிப்படுகின்றன.

## குறிஞ்சி - புணர்தல்

புணர்வது என்பது ஒத்த தன்மையுடைய தலைவனும், தலைவியும் கொடுப்பாரும் கொள்வாரும் இன்றித் தனித்தோரிடத்தில் தாமே கூடுங் கூட்டம் ஆகும். இப்புணர்தல் ஒழுக்கத்தில் பின்வரும் வாழ்வியல் நிகழ்வுகள் புதைந்துள்ளன.

## புனலாடுதல்

பழங்காலத்தில் ஆற்றில் புனலாடும் பழக்கம் இருந்திருக்கின்றது. கலித்தொகையில் வரும் தலைவி, புனலாடும் போது தலைவன் சந்திப்பு நிகழ்கின்றது. தலைவியை நீரில் ஏற்படும் ஆபத்திலிருந்து பாதுகாப்பது போன்று தலைவன் வருகின்றான்.

*''காமர் கடும்புனல் கலந்துஎம்மோடு ஆடுவாள்,*

*தாமரைக்கண் புதைத்து அஞ்சித்தளர்ந்து அதனோடு ஒழுகலான்*

*நீள்நாக நறுந்தணார் தயங்காப்பாய்ந்து அருளினால்''*

(குறி . கலி : 39 : 1-3)

தலைவன் தலைவி சந்திப்புடன் 'புனலாடும்' வழக்கம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

### அறம் போற்றல்

மனம், பொழி, மெய்களால் நற்செயல் புரிதலே அறம். பண்டைத் தமிழா் காதல் வாழ்விலும் அறம் போற்றினா். அறத்தால் வரும் பொருளும் இன்பமுமே சிறந்தது. அறத்தால் வருவதே இன்பம் என்று கூறுவா்.

*''ஆா்வுற்றாா் நெஞ்சம் அழிய விடுவானோ*

*ஓா்வுற்று ஒருதிறம் ஒல்காத நோ்கால்*

*அறம்புரி நெஞ்சத் தவன்''* (குறி. கலி: 42: 13-13)

தலைவன் தலைவியின் நெஞ்சம் அழியுமாறு விட்டுச் செல்லுதலை அறமற்ற செயல் என்று தோழி சுட்டிக் காட்டுகின்றாள். வாழ்க்கைக்குரிய அறத்தைத் தலைவன் செய்யத் தவறியதைச் சுட்டிக் காட்டும் பொறுப்புணா்வும் காணப்படுகின்றது.

### வெளிப்படையான காதல் வாழ்வு

களவு வாழ்க்கை அங்கீகரிக்கப்பட்ட சங்க காலத்தில் தலைவன் தலைவியிடம் வெளிப்படையான காதல் வாழ்வு மேற்கொண்டுள்ளான். தலைவனும் தலைவியும் ஒருவரையொருவா் சந்தித்து மகிழ்ந்தனா்.

*''..... ..... .... ..... .... கைநெகிழ்பு*

*பொய்யாக, வீழ்ந்தேன், அவன் மாா்பில் வாயாச்செத்து*

*ஓய்யேன ஆங்கே எடுத்தனன் கொண்டான்; மேல்*

*மெய்யறியா தேன்போல் கிடந்தேன்மன்''*

(குறி . கலி: 37: 16- 19)

என்ற பாடலடியில் தலைவி காதலை வெளிப்படுத்தும் துணிவுடையவள் என்பது புலனாகிறது.

### நற்பண்பு கூறல்

தன் உறவினா் நெஞ்சு வருந்துமாறு ஒருவனிடம் கவா்ந்த செல்வமானது தானழிவதோடு தன்னைப் பெற்றவன் குடியையும் அழிக்கும் என்னும் நல்லறம் கூறப்படுகின்றது.

*"கேளிர்கள் நெஞ்சமுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்*

*தானிலான் குடியேபோல் தமியவே தேயுமால்"*

(குறி. கலி : 49 : 8 -9)

தன்கிளையழிய வாழ்பவன் ஆக்கம் சிறப்பில்லாதது என்றும் சான்றோர் வற்புறுத்தியுள்ளதையும் அறியமுடிகிறது.

**ஈகைப் பண்பு**

தமிழர்களுக்கேயுரிய தலையாய பண்புகளுள் முதன்மையானது ஈகைப்பண்பு. குறிஞ்சிக்கலியில் கபிலர் தமிழர்களின் ஈகைக் குணத்தைப் பதிவு செய்துள்ளார்.

*"..................... இடும்பையால்*

*இன்மை உரைத்தார்க்கு அது நிறைக்கல் ஆற்றாக்கால்*

*தன்மெய் துறப்பான் மலை"* (குறி. கலி : 43 : 25 - 27)

**பாலை – பிரிதல்**

பாலை நில மக்களின் உரிப்பொருளாகச் சுட்டப்படுவது பிரித்தலும் பிரிதல் நிமித்தமும் ஆகும். பிரிதல் உணர்வு வெளிப்பாட்டிலும் சங்ககால வாழ்க்கை அறங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

**ஈதல் அறம்**

ஈகையின் நிமித்தம் தலைவன் தலைவியரியடையே பிரிவு நிகழ்ந்துள்ளது. ஈகை வாழ்க்கையை மெய்யான வாழ்க்கை இனிமையான நீரை உடைய ஆற்றங்கரையின் இருபுறமும் இருக்கும் கரைகளில் பூத்துக் குலுங்கும் மரங்களைப் போல கொடுத்தலில் குறைவு காட்டாது ஒழுகும் அறநெறியாளரின் செல்வம் பெருகும் என்று நம்பியுள்ளனர்.

*"ஈதலில் குறைகாட்டாது அறன் அறிந்து ஒழுகிய*

*தீதிலான் செல்வம்போல் தீம் கரை மரம் நந்த"* (பா.கலி :27: 1 -2)

தன்னிடம் பொருள்கேட்டு வருவோருக்கு ஈயாமை இழிவானது எனக் கருதி, அவர்கள் மனம் நிறைவு பெறும்படி கொடுக்கும் பண்பினைப் பாலைக்கலி புகழ்கிறது.

## இல்லறப் பண்பு

தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் பிரியாமல் விருந்தினர்களைப் பேணியும் அறவோர்க்கு அளித்து வாழ்தலே சிறந்த அறமாகும்.

"*இடனின்றி இரந்தொன்று ஈயாமை இழி*" (பா.கலி :2 : 19)

இரந்தோர்க்குக் கொடுத்தலே இல்வாழ்க்கையின் அடிப்படைப் பண்பாக எடுத்து இயம்பப்படுகிறது.

## பொருள் ஈட்டல்

உலக வாழ்விற்குப் பொருள் இன்றியமையாதது. வாழ்வு செழிக்கப் பொருள் வேண்டும். பண்டைத் தமிழர் வாழ்வில் அறவழியில் பொருள் தேடுதலை முக்கியக் கடமையாகக் கருதினர்.

"*மடியிலான் செல்வம் போல*" (பா.கலி : 35 : 1)

## விருந்தோம்பல் பண்பு

தமிழர்தம் இனிய பண்புகளுள் தலைசிறந்த பண்பு விருந்தோம்பல் ஆகும்.

"*மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பித்*
*தன்நகர் விழையக் கூடின*" (பா. கலி : 8 : 21 - 22)

விருந்தோம்பல் அறம் இல்லறத்தில் பேசப்படுகின்றது. தலைவன் இன்றி தலைவி மட்டும் விருந்து செய்யக்கூடாது என்பதையும் இலக்கியங்கள் உணர்த்துவதை அறிய முடிகிறது.

## சுற்றம் தழுவுதல்

சங்க கால மக்கள் தன்பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு என்றில்லாது சுற்றத்தாரைத் தழுவி வாழ்ந்தனர். சுற்றத்தினரோடு பொருளைப் பகிரிந்து வாழ்வதே மிகச் சிறந்த பண்பாடாகக் கருதினர். அவ்வாறு வாழாது அவர்கள் துன்புறும்படி வாழ்வது இழிவென்றனர்.

"*கிளை அழிய வாழ்பவன் ஆக்கம் போல் புல்லென்று*
*வளை யானா நெகிழ்போடும் தோளாயின், எவன் செய்கோ*"
(பா. கலி :34 : 18 - 19)

### மருதம் - ஊடல்

ஊடல் உரிப்பொருள் என்பது களவிலோ, கற்பிலோ பிரிவு வேலையில் தலைவனோ தலைவியோ ஒருவருக்கொருவர் பிணக்குற்று ஒழுகுவதாகும்.

> *"எல்லார் வாயிலும் இருவர்தே எத்தும்*
> *புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப"*

ஊடல்கள் எல்லாம் தலைவன், தலைவி இருவர் மட்டும் பொருந்தி மகிழ்ச்சியுடையவர் ஆவர்.

தலைவன் தலைவி ஊடல், தலைவன் காமக்கிழத்தி ஊடல் சங்கப்பாக்களில் குறிப்பிடப்படுகின்றது. சங்க காலச் சமுதாயத்தில் பரத்தமை ஒழுக்கம் வழக்கமாக இருந்துள்ளது. தலைவனின் பரத்தமை ஒழுக்கம் அறிந்த தலைவி தலைவனுடன் மனத்தளவில் ஊடல் கொள்வாள்.

### பரத்தமை

தலைவனுக்கு உரிய பிரிவு நிலைகளில் பரத்தையிற் பிரிவு உள்ளது. பரத்தமை ஒழுக்கம் வெளிப்படையாக அமைந்திருப்பது இலக்கியங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றது. தலைவனுக்கு உரிய பிரிவு நிலைகளில் பரத்தையிற் பிரிவு என்ற ஒன்றும் உள்ளது.

> *"பூப்பின் புறப்பாடு ஈராறுநாளும்*
> *நீத்த கன்று உறையார் என்மனார் புலவர்*
> *பரத்தையின் பிரிந்த காலையான"*

அன்பின் ஐந்திணையுள் ஒன்றாகக் கருதப்படும் மருதத்திணை, பரத்தையர் தொடர்பின் காரணமாகவே ஊடலும்,ஊடல் நிமித்தமும் என்பதை உரிப்பொருளாகக் கொண்டு அமைகின்றது. மருதத்திணைப் பாடல்கள் அக்கால வழக்கத்தைச் சுட்டினாலும் கூட மகளிர் விலைமகளிர் ஆதல் கூடாது என்றும், பரத்தையர் இனம் பெருகுதல் கூடாது என்றும் மானிட இனத்திற்கு உணர்த்தும் விதமாக அமைகின்றது எனலாம்.

### சூளுரைத்தல்

சங்க கால மக்கள் பொழுது போக்காகப் பல விளையாட்டுக்களைக் கண்டு மகிழ்ந்தனர். சூளுரைக்கும் பண்பு சங்க காலத்தில் ஒரு பொழுது

போக்காகக் காணப்பட்டிருக்கிறது. தெய்வத்தின் மீது சூளுரைக்கும் பண்பும் உண்டு. தலைவன், தலைவி மேல் சூளுரைத்துள்ளான்.

*''போற்றிய நின்மெய்தொடுகு''* (மரு .கலி : 95 : 24)

தற்காலத்தில் தலையில் அடித்துச் சத்தியம் செய்தலும், கையில் சத்தியம் செய்தலும் மக்களிடையே காணப்படும் நம்பிக்கை ஆகும்.

## அரசியலறம்

மன்னர்கள் நீதிநெறி தவறாமல் ஆட்சி செய்தனர். மக்களின் நல்வாழ்விற்காகப் போராடும் ஆற்றல் பெற்றவராக விளங்கினர். அரசனின் செங்கோன்மைத் திறத்தை,

*''குழவியைப் பார்த்து உறூஇம் தாய்போல் உலகத்து*
*மழைசுரந்து அளித்து ஓம்பும் நல்லூழி யாவர்க்கும்*
*பிழையாது வருதல்நின் செம்மையின் தர, வாய்ந்த*
*இழை அணி கொடித்திண்தேர், இனமணியானையாய்''*

(மரு. கலி : 99 : 4 -8)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன.

## முல்லை - இருத்தல்

*''தலைமகன் வருந்துணையும் ஆற்றியிருத்தல்''*

இருத்தல் உரிப்பொருள் இன்னதென்பதை இளம்பூரணர் தலைமகன் வருந்துணையும் ஆற்றியிருத்தல் என்பர். தலைவன் அன்பினை எதிர்பார்த்த தலைவி வருந்தாமல் (தம் மனதிற்கு ஆற்றியிருத்தல்) இருத்தல் என்பதாகும்.

## மகட்கொடை தருதல்

தலைவன் ஏறுதழுவியபின் தலைவனுக்குத் தலைவியின் தமர் மகட் கொடை தந்துள்ளனர்.

*''நேரிழாய்! கோள் அரிதாக நிறுத்த கொலையேற்றுக்*
*காரினாகதன் அஞ்சான் பாய்ந்த பொதுவற்கே*
*ஆர்வுற்று, எமர், கொடை நேர்ந்தார் அவர்எடுத்த*
*ஊராரை உச்சி மிதித்து''* (முல். கலி. 104: 73 -76)

## சூளுரைத்தல்

சங்க இலக்கியத்தில் தெய்வத்தின் பெயரைச் சொல்லி சூளுரைத்தல் என்பது பெருவழக்காக இடம் பெற்றுள்ளது.

*"பிரிவு இல்லாய் போல நீ தெய்வத்தின் தெளித்தக்கால்*
*அரிது என்னாள், துணிந்தவள் ஆய்நலம் பெயர்தர"*
(முல்.கலி:124: 18 – 19)

தெய்வம் காட்டித் தெளிந்தமையும், தெய்வத்தின் அடிதொட்டுச் சூளுரைத்தமையும் அறிய முடிகிறது.

## விழா

இளிவேனிற்காலத்தில் காமன் விழாக் கொண்டாடப்படுவது என்றும், அவ்விழாவில் காமனுக்கு ஆய மகளிர் பால் மடை கொடுப்பர் என்பதும் கலித்தொகையில் இருப்பதை,

*"படையிடு வான்மன்கண்டீர்காமன் மடையடும்*
*பாலொடு கோட்டம்புகின்"* (முல். கலி:109: 19 – 20)

என்பதிலிருந்து தெய்வத்திற்குப் பால் மடை கொடுக்கும் வழக்கம் இருந்தது என்பதை அறிய முடிகிறது.

## நெய்தல் – இரங்குதல்

இரங்கல் உரிப்பொருள் இன்னது என்பதைத் தொல்காப்பியர் கூறுவதன் வழி அறியலாம்.

*"வருத்தம் மிகுதி சுட்டுங்காலை*
*உண்டென மொழிய வாழ்க்கையுள் இரக்கம்"* 11

இரக்கம் என்பது இரங்கல் உரிப்பொருள் பற்றியதாகும். இரங்கல் உரிப்பொருள் என்பது களவிலோ கற்பிலோ தலைவனோ தலைவியோ பிரியும் வேலையில் தோன்றும் மிகுந்த வருத்தமேயாகும்.

*"இரங்கலாவது ஆற்றாமை"*

என்று நச்சினார்க்கினியர் கூறுவார்.

### அரசநீதி

சமுதாயத்தின் அங்கமாய் விளங்கும் குடும்பத்திற்கும் குழுவிற்கும் பாதுகாவலனாய் இருப்பவன் அரசனாவான். அவன் தன் நாட்டு மக்களுக்கு விருப்பு வெறுப்பின்றி நீதி வழங்க வேண்டும். நாட்டு மக்களைத் தன்னுயிர்போல பாதுகாக்க வேண்டும் என்றும் அறம் பேசப்பட்டுள்ளது.

*''தன்உயிர் போல தழீஇ உலகத்து*

*மன்உயிர் காக்கும் இம்மன்னும் என்கொல்லோ''*

(நெ.கலி : 143:53-54)

### மது ஒழிப்பு

சங்க காலத்தில் மது உண்ணுதல் குற்றமாகக் கடியப்படவில்லை. ஆனால் கலித்தொகை மது ஒழிப்பைப் பேசியுள்ளது.

*''ஆறுஅல்ல மொழிதோற்றி அறவினை கலக்கிய*

*தேறு கள் நறவுஉண்டார் மயக்கம்போல்''* (நெ.கலி. : 14 : 1-2)

### இரத்தல் இன்னாதது

ஈகையை மிக உயர்ந்த அறமாக வலியுறுத்திய சங்க காலத்திலேயே இரத்தல் இன்னாதது என்று தனிமனிதனுக்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது.

*''உரவுத்தகை மழுங்கித்தன் இடும்பையால் ஒருவனை*

*இரப்பவன் நெஞ்சம் போல் புல்லென்று புறமாறி''*

(நெ.கலி : 120 : 4-5)

### மடலேறுதல்

தலைவியன் மீது கொண்ட அன்பின் காரணமாகத் தலைவன் ஏறுதழுவலை நிகழ்த்துகின்றான். தலைவியின் மீது கொண்ட காமத்தின் காரணமாகத் தலைவன் மடலேறுதலைச் செய்கின்றான்.

*யாமத்தும் எல்லையும் எவ்வத்திரை அலைப்ப*

*மாமேலேன் என்று மடல் புணையா நீத்துவேன்*

*தேமொழி மாதர் உறாஅது உறிஇய*

*காமக் கடலகப்பட்டு''* (நெ.கலி : 139 : 14-17)

### வாய்மை

சங்ககால மக்கள் வாய்மையைப் போற்றினர். தான் அறிந்த உண்மையை மாற்றிக் கூறுவது கரி பொய்த்தலாகும். அக்கால மக்கள் மரத்தின் கீழிருந்து பொய் கூறினால் அம்மரம் வாடிப்போகும் என நம்பினர். ஒருவர் செய்ததை மறைத்தால் அச்செயலை அவர் நெஞ்சமே சுட்டிக் காட்டும் என்பதால் உண்மை பேசினர்.

*"... .... ... ... ... ..... ...அறிபவர்*

*நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை அறிபவர் ஆகலின்"*

(நெ.கலி : 125 :3-4)

### அடைக்கலம் போற்றுதல்

தன்னிடம் அடைக்கலமாக வந்தவரைக் காத்துள்ளனர்

*"போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை"*

(நெ.கலி. 133:7)

தலைவனிடம் அடைக்கலம் வந்த தலைவியைப் பிரியாது வாழ்தல் வேண்டும் என்ற கூற்றின் மூலம் அடைக்கல அறம் வலியுறுத்தப்படுகிறது.

### தொகுப்புரை

குறிஞ்சிக் கலியில் புணர்தல் என்னும் உரிப்பொருளுடன் புனலாடுதல், அறம் போற்றல், வெளிப்படையான காதல் வாழ்வு, நற்பண்பு கூறல், ஈகைப் பண்பு போன்ற பண்பாட்டுச் சுவடுகள் வெளிப்படுத்தப்படுன்றன. பாலைக்கலியில் பிரிதலில் ஈதல் அறம், இல்லறப்பண்பு, பொருள் ஈட்டல், விருந்தோம்பல் பண்பு, சுற்றம் தழுவுதல் போன்ற பண்பாட்டுச் சுவடுகள், மருதக்கலியில் ஊடல் என்னும் உரிப்பொருளில் பரத்தமை, விருந்தோம்பல், சூளுரைத்தல், அரசியலறம் போன்ற பண்பாட்டுச் சுவடுகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

முல்லைக் கலியில் இருத்தல் என்னும் உரிப்பொருளில் மகட்கொடை தருதல், சூளுரைத்தல், விழா ஆகிய பண்பாட்டு நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நெய்தல்கலியில் அரசநீதி, மது ஒழிப்பு, இரத்தல், இன்னாதது என்னும் உரிப்பொருளில் மடலேறுதல், வாய்மை, அடைக்கலம் போற்றுதல் போன்ற பண்பாட்டுக் கூறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# ஒப்பிலக்கியக் களங்கள்

*பேராசிரியர் முனைவர் து. மூர்த்தி*
அலிகர் முஸ்லீம் பல்கலைக்கழகம்

மனிதனுக்குள் உள்ளார்ந்து பொதிந்திருந்த படைப்பூக்கம் என்பது சமுதாய வளர்ச்சியின் அடிப்படையாக அமைந்தது. உணவு தேடும் குழுக்களாக இருந்த மக்கள் கூட்டம் உணவு உற்பத்திச் சமுதாயமாக மாறி அமைந்த ஒவ்வொரு காலக் கட்டத்திலும் - காலப் பிரிவிலும் மனிதனின் படைப்பூக்கம் சமுதாய வளர்ச்சிக்கான கருவிகளையும் மக்கள் தொடர்புகளையும் உருவாக்கியது. உணவு தேடுதல், வேட்டை, உற்பத்தி என்ற மூன்று சமூக நிலைகளில் உற்பத்திச் சமுதாயத்தில் நிலையான குடியிருப்புகளும், உபரியும், சேமிப்பும் உடன் நிகழ்வுகளாக அமைந்தன. சேமிப்பு என்பது பாதுகாப்பின் அடிப்படை!

சேமிப்பும் பாதுகாப்பும் சமுதாயத்தின் அடுத்த வளர்ச்சி நிலைக்கு முன் நிபந்தனைகளை விதித்தன: 1) கருவிகளின் தேவை, 2) உழைப்புப் பிரிவினை. விலங்குகளுக்கும் மனிதனுக்குமான அடிப்படை வேறுபாடே, மனிதன் கருவிகளை உருவாக்குதல், பயன்படுத்தல், வளர்த்தெடுத்தல் என்பனவற்றில் சிறந்திருந்தான் என்பதுதான்! உற்பத்திக்கான கருவிகளின் வளர்ச்சியும், செய்தித் தொடர்புக்கான கருவிகளின் வளர்ச்சியும், 'சேமிப்பும் பாதுகாப்பும்' என்பதற்கும் அப்பால், அல்லது அவற்றின் அடிப்படையில், சமூகத்தின் கட்டுக்கோப்பின் ஒரு பகுதியாக உழைப்புப் பிரிவினையை உண்டாக்கின: 1. பாதுகாப்பு, 2. வேளாண்மை, 3. கால்நடை பராமரிப்பு, 4. அறிவு, ஆராய்ச்சி, வளர்ச்சி. உழைப்புப் பிரிவினையின் அடிப்படையில் ஆண் பெண் என்ற வேறுபாடு உடன் நிகழ்வாக அமைந்தது. இந்த வேறுபாடுகள் அனைத்தையும் அறிவு உழைப்பினர், உடல் உழைப்பினர் என்ற பரந்த இரு பகுப்புக்குள் அடக்கலாம்.

**அறிவு உழைப்பினர்**

- **ஆண்**
  - வழிபாடு நடத்துவோர்
  - சமூக வளர்ச்சி ஆய்வினர்
    1. உற்பத்தி வளர்ச்சி
    2. பாதுகாப்பு
    3. கல்வி
    4. மக்கள் தொடர்பு

**உடலுழைப்பினர்**

- **ஆண் - பெண்**
  - வீரர் வேளாண்மை கைவினைஞர்
  - வீட்டுப்பணி கால்நடை

இந்தப் பிரிவினையின் மிக உயர்ந்த விளைவு, உற்பத்திச் சேமிப்பைப் போல, அறிவுச் சேமிப்பு நடைபெற்றதுதான்! அதாவது இயற்கை + உழைப்பு + சிந்தனை என்ற முக்கூட்டுநிலை, 1. அறிவு, 2. கற்பனை 3. படைப்பாக்கம் (Creative) என்ற வளர்ச்சி நிலைகளை ஏற்படுத்தியது. படைப்பாக்கம் வாய்மொழிப் பாடல்கள், நிகழ் கலை (கூத்து, நாடகம்), ஓவியம், சிற்பம், கட்டடம் (கோட்டைகள், தூண்கள், கோயில்), கைவினைக் கலை முதலான பல்வேறு கலைகளாக விரிந்தது. ஆக, கலை இலக்கிய வளர்ச்சியின் ஊற்றுக் கண்ணாகச் சமூக வளர்ச்சியே அமைந்தது. தெளிவு கருதி இதைக் கீழ்க்கண்ட வாய்பாடாக அமைக்கலாம்.

1. இயற்கை X மனிதன் 'human' = சமூக வளர்ச்சி
2. இயற்கை X மனிதன் X சமுதாயம் = அரசின் தோற்றமும், கலை இலக்கிய உருவாக்கமும்.

இலக்கியத்தின் தவிர்க்க முடியாத கூறு ஒப்பீடு என்பதாகும். ஒப்பீட்டு உணர்ச்சி இல்லையென்றால் உவமை, உருவகம், வருணனை ஆகியன தோன்றியிருக்க முடியாது. உணர்ச்சிகளின் பின்புலமாக இயற்கை அமைக்கப்பட்டதற்குக் கூட ஒப்பீட்டு உணர்ச்சியே காரணமாக இருக்கமுடியும். முதல், கரு, உரி இயைபும், பிற்காலத்தில் ஐரோப்பிய மரபில் சொல்லப்பட்ட 'புறவயப் பொருள் இயைபும்' (Objective Correlative) கூட ஒப்பீட்டு உணர்ச்சியால் உருவானதுதான்! இந்தப்

புரிதலின் அடிப்படையில் இலக்கியத்தின் ஒப்பீடு என்பதை விரிவாக ஆராய்வோம்.

இலக்கிய ஒப்பீட்டை நாம் இரண்டு வகையாகப் பிரித்து ஆராயலாம்: 1. ஒப்பீட்டு இலக்கியத் திறனாய்வு 'Comparative literary Criticism 2. ஒப்பிலக்கியம். ஒப்பிடுதலின் வகைகள் என்றாலும் கூட இவை அடிப்படையில் (முற்றிலும்) வேறுபட்ட இரண்டு அறிவுத் துறைகளாகும். முதலாவது, ஒரே மொழியைச் சார்ந்த இரண்டு இலக்கியங்களை ஒப்பிட்டுத் திறனறிவதாகும். இரண்டாவது, ஒப்பிலக்கியம், இரண்டு வேறுபட்ட மொழிகளைச் சார்ந்த இலக்கியங்களின் ஒப்பீடாகும். ஆக, ஒப்பிலக்கியத்தின் அடிப்படை, அ) பல நாடுகள், ஆ) பல மொழிகள், இ) பல பண்பாடுகள், ஈ) பல ஆளுமைகள் எனப் பலவாகப் பிரிவதாகும். இப்படிப் 'பலவாக' (Plural, many, multi, the other...) உள்ளனவற்றின் இடையே உள்ள ஒப்புமைகளைக் காண்பதே ஒப்பிலக்கியத்தின் அடிப்படையும் தேவையுமாம்!

பழக்கம், வழக்கம், ஒழுக்கம், பண்பாடு, மரபு என்ற சமுதாயக் கட்டமைப்பு ஒவ்வொரு மொழிக்கும் நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் வெவ்வேறாக அமைந்திருந்தாலும் ஒட்டு மொத்த மனிதக் கூட்டத்தைப் – மனங்களைப் பிணைத்திடும் 'மனித அறம்' என்பதைக் காண்பதாகவே ஒப்பிலக்கியம் அமைகிறது. பிறை நிலாவைப் பற்றி மட்டும் கிட்டக் கூடிய உவமைகளைக் காண்போம். முக்காடிட்டுள்ள வானப் பெண்ணின் முகவாய், இதழ், நெற்றி, திலகம்; வானக் கடலினின் படகு, விண்மீன் நெல்மணிகளுக்கு நடுவே உள்ள அரிவாள்; திறந்து வைக்கப்பட்டுள்ள வட்டமான டப்பா, பாதி தோசை....! இப்படி உலகின் பல்வேறு பொருள்கள், நிகழ்வுகள், ஆளுமைகள், வரலாறு ஆகியனவற்றின் இலக்கியப் பார்வைகள் வேறுபடுவதற்கான காரணங்கள் யாவை?

கண் உள்ள எல்லோரும், பார்வை செல்லும் எல்லை வரை உள்ள பொருள்களைக் காண்கிறோம். இவை இயற்கையாகவே மனித முயற்சி இன்றியே கூடப் பார்வையில் படக் கூடும். இந்த நிலையில் படைப்பாளன் உருவாகிவிடுவதில்லை. பார்வை 'seeing' என்பதோடு நோக்கு 'look' என்ற நிலை சேரும்போது உற்றுநோக்குதல் 'observation' என்ற நிலை ஏற்படுகிறது. படைப்பின் முதல் படி உருவாகிவிட்டது. ஊற்றுநோக்கு நிலை தேர்ந்தெடுப்பு 'selection' நிலையாக மாறுகிறது. இவற்றிற்குப்


பின்னால், உள்வாங்குதல் 'internalisation' என்ற முறைமை தோன்றுகிறது. உள்வாங்குதல் நிலை வரை கூடப் பலராலும் வர முடியும். ஆனால் இந்த நிலையில் கூடப் படைப்பு மனம் உருவாகிவிட்டதாகக் கூறமுடியாது.


உள்வாங்குதல் நிலைக்குப் பின்பு கூட்டுதல் 'addition' அல்லது/மற்றும் குறைத்தல் 'reduction' என்ற நிலைக்கு வரும்போதுதான் படைப்பு 'creation' என்பது உருவாகிறது. ஆக,'பார்வை → நோக்கு → உற்றுநோக்கு → தேர்ந்தெடுப்பு → உள்வாங்குதல் → கூட்டுதலும் குறைத்தலும் → படைப்பு' என்ற இந்த நிலைகளின் பிணைப்பு வளர்ச்சியையே இலக்கியப் படைப்பு முறைமை 'literary creative process' என்கிறோம். இந்த முறைமையின் இறுதி நிலையான 'கூட்டுதலும் குறைத்தலும்' என்பது தான் பல்வேறு மனிதர்களின், இனங்களின், நாடுகளின் உணர்ச்சிப் பொறியும் 'sensitivity' அறிவுப் பொறியும் 'sensibility' ஆகும். இந்த இரண்டின் சேர்க்கை முறைமையில் அல்லது சேர்க்கையில் இருந்து உருவாவது தான் அடையாளம் என்பதாகும்.

உ + அ = அடை (S+S = ID) என் இதை விளக்கலாம்.

மேற்கு வானத்தைக் காணும் படைப்பு மனங்கள், 1) சிவபெருமானின் செம்பொன் மேனி, 2) குங்குமத் தோட்டம் இங்கு ஏன் பூத்தது, 3)காதலியின் கன்னம் 4) எந்த ஏகாதிபத்தியத்தின் கால்கள் இங்கே வெட்டப்படுகிறது எனப் பல்வேறு படைப்புகளாக விரிகின்றன; இவை ஒவ்வொன்றின் பின்னாலும் உணர்வு மற்றும் அறிவுப் பொறிகளின் இயைபுகள் - அடையாளங்கள் வேறுபடுகின்றன என்பதே இதன் பொருளாகும். இந்தப் பொறிகளின் ஒப்புமை ஆக்கத்தைக் காண்பதே ஒப்பிலக்கியம் ஆகும்.

மொழிகள் மற்றும் அடையாளங்கள் என்ற கண்ணோட்டத்தில் இருந்து ஒப்பிலக்கிய முக்கோணம் என்பதை உருவாக்கிக் காண்போம்.



ஒப்பிலக்கியம் என்பது கண்டிப்பாக இரண்டு மொழிகளுக்கு இடையே உருவாவது என்ற அடிப்படையில் புதிய இணைப்பை உருவாக்க வேண்டியுள்ளது. இதை நன்கு விளங்கிக் கொள்வோம். ஆங்கிலம்/ பிரெஞ்சு / தமிழ் என மொழி ஒரே மொழியாக இருக்கலாம். ஆனால், 'உ + அ =அடை' என்ற வாய்பாடு வேறுபட்டு அமைகிறது. பிரெஞ்சு மொழி, பிரான்சு தேசத்திலும் கனடாவிலும் தேசிய மொழியாக விளங்குவது உண்மைதான். ஆனால் அடையாளங்கள் வேறுபட்டுவிடுகின்றன. பிரான்சின் படைப்பு மனத்திற்குரிய 'உ + அ =அடை' என்பதற்கும் கனடா (பிரெஞ்சு)வின் 'உ + அ = அடை' என்பதற்குமான வேறுபாடுகள் மிகுதி. தமிழ் நாட்டுத் தமிழ்ப் பற்று இலக்கியத்திற்கும் ஈழத் தமிழ்நாட்டுத் தமிழ்ப் பற்று இலக்கியத்திற்கும் உள்ள 'உ + அ = அடை' வேறுபாடுகள் வெளிப்படை விளக்கத் தேவையில்லை. ஆக ஒப்பிலக்கியம் என்பது இரண்டு மொழிகளுக்கு இடையிலேயோ ஒரே மொழிசார் இரண்டு அடையாளங்களுக்கு இடையிலேயோ இயங்குவது எனத் தெளிவு படுத்திக்கொள்ளலாம். இந்தத் தெளிவு இல்லை என்றால் இந்திய ஒப்பிலக்கியம் முதலான கூட்டுத் தேசிய - அடையாளங்களின் - படைப்புகளை உணர்ந்துகொள்வது கடினமாகி விடும். மேற்கண்ட புரிதல்களின் அடிப்படையில், ஒப்பிலக்கியம் என்பதைக் கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1) இரண்டு நாடுகளின் இலக்கியங்களை ஒப்பிடுதல் (இங்கிலாந்து, ரஷியா)

2) இரண்டு தேசங்களின் இலக்கியங்களை ஒப்பிடுதல் (கனடா, பிரான்சு)

3) இரண்டு மொழிகளின் இலக்கியங்களை ஒப்பிடுதல் (தமிழ், வங்காளி)

4) ஒரு மொழி இலக்கியத்தைப் பிற கலைகளோடு ஒப்பிடுதல் (நாவலும் திரைப்படமும்)

5) ஒரு மொழி இலக்கியத்தை பிற அறிவுத் துறைகளோடு (பொருளியல், சமூகவியல்...) ஒப்பிடுதல்

ஒப்பிலக்கியத்தின் நோக்கம் என்ன என்ற கேள்விக்கு விடை காண முயன்றால் ஒப்பிலக்கியக் களங்களின் விரிவை நம்மால் உணர முடியும். ஒப்பிலக்கியத்தின் நோக்கம்தான் என்ன?

**பன்மையில் ஒருமை காண்பதும் ஒருமையின் பன்மை காண்பதும்.**

ஒருமையின் பன்மை காண்பது என்பதை மிக நுட்பமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்திய ஒப்பிலக்கியம் 'Comparative Indian Literature' என்பது ஒருமையின் பன்மை காண்பதாகவே அமையும். அல்லது இந்தியப் பன்மை என்றேனும் ஒருமை பெற முடியுமா என்ற வினாவின் விடையாகவே இந்திய ஒப்பிலக்கிய ஆய்வு அமையும். 'கர்ந்தியடிகளும் / பகத்சிங்கும் / 1942 ஆக்ஸ்டுப் புரட்சியும் இந்திய இலக்கியங்களும்' என்ற தலைப்பு மேற்கண்ட இரண்டு நிலைகளில் ஒருமையின்பன்மை காண்பதாகவே அமையும். மராட்டியர்களும் (வி. ச. காண்டேகர்), நாகர்களும் (பீரேந்திரகுமார் பட்டாச்சார்யா), தமிழர்களும் (அகிலன்) கண்ட காந்தியும் இலக்கிய வெளிப்பாடுகளும் ஒருமையின் பன்மையே ஆகும். சமுதாய உருவாக்கமும் அதற்கான இலக்கிய உருவாக்கமும், பல்தேசியம் ஒருங்கிணைந்து ஒற்றைத் தேசியம் உருவாகும் போது வெளிப்படும் இலக்கியங்களும் ஒருமையின் பன்மைக்கான சிறந்த ஒப்பிலக்கியக் களங்களாக அமையக் கூடியன.

2) மொழிகள், இனங்கள், (racial/ethnic) தேசங்கள், வட்டாரங்கள் என்ற எல்லைகளைக் கடந்து உலகன் 'World 'human' என்ற மனிதப் பேராற்றலை உலக இலக்கியம் வழியாகக் காணுதல்.

3) படைப்பாளனின் படைப்பு அனுபவங்க்ளை ஆராய்வதும், அதன் வழியாக, இலக்கியப் பெருஞானத்தைத் wisdom of literature' துய்ப்பதும் இரண்டு வேறுபட்ட சூழலமைவுகளில் (contexts) உருவான இரண்டு படைப்பாளிகளின் படைப்பு அனுபவங்களை அவர்தம் இலக்கியங்கள் வழியாக ஆராய்தல் வெறும் சமுதாய ஒப்பீட்டு ஆய்வாக மட்டும் அமைவதில்லை, இரண்டு அழகியல் அனுபவங்களின் ஒப்பீடாகவும் அமைவதாகும்.

4) பல்வேறு பண்பாட்டுச் சூழலமைவுகளில் மனித மனம் 'human mind' என்பது எவ்வாறு இயங்குகிறது என்பதைக் காணுதல்.

பல்வேறு மொழி, தேச, நாட்டு மக்களிடையே பல்வேறு பண்பாட்டுச் சூழலமைவுகளில் ஒருமித்த மனித நடவடிக்கைகளை

'collective human behaviour' உருவாக்க முடியுமா என்பதை ஆராய்தலே பொது மனித மன இயக்கத்தைக் காணும் முயற்சியாகும்.

ஒப்பிலக்கியத்தின் நோக்கங்களைக் கண்டது போல, அதன் இன்றியமையாமையை, அவசியத்தைக் காண்பதும் தேவையாகும். உலகம், இந்தியா, தமிழகம் என எந்த எல்லைப் பரப்பை எடுத்துக் கொண்டாலும் கீழ்க்கண்ட வரலாற்றுச் சூழலமைவுகள் பொதுவாகக் காணக்கிடப்பனவாகும்.

அ) உலகப் போர்கள், புரட்சிகள், கருத்துநிலைகளும் தலைவர்களும், (ideologies and leadership) படைப்பாளர்கள்.

ஆ) பண்பாடுகளின் இடையூடு ஆய்வுகள் (Crass-cultural studies)

மக்கள்திரளின் இடப்பெயர்வும் அகதி நிலைகளும், விடுதலை இயக்கங்களும், தேசங்களும், தேசிய நாயகர்கள், நாயகிகள், இலக்கியங்கள், ஏகாதிபத்திய - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு; இருமொழி / பன்மொழிச் சூழல்களும், பொதுவான இலக்கிய மூலங்களும் - இவை பண்பாட்டின் இடையூடு ஆய்வுக்குப் பெரிதும் வழிவகுப்பன.

இலக்கிய வடிவங்கள், கருப்பொருள்கள், இலக்கிய இயக்கங்கள், கோட்பாடுகள் ஆகியன பொதுவான இலக்கிய மூலங்களுள் அடங்குவனவாகும்.

இ) இலக்கியக் கழகங்களும் மொழிபெயர்ப்புகளும்

மேற்கண்ட சூழலமைவுகள் பல்வேறு பண்பாடுகளின் சங்கமம் ஆகும். இவற்றின் இலக்கியப் பதிவுகளை / பிரதிபலிப்புகளை ஆராய்வதற்கு ஒப்பிலக்கியம் அமைத்துத் தரும் களம் சிறந்ததாகும். இந்தச் சூழல்களே ஒப்பிலக்கியத்தின் இன்றியமையாமையையும் உணர்த்துவன.

இலக்கியத்தின் தோற்றம், ஒப்பிலக்கியத்தின் அடிப்படைகள், ஒப்பிலக்கியத்தின் நோக்கம், இன்றியமையாமை என்பனவற்றின் தெளிவில், ஒப்பிலக்கியம் என்றால் என்ன என்ற கேள்விக்கு விடையிறுப்பதன் மூலம் அதை வரைவிலக்கணப்படுத்த முடியுமா எனக் காண்போம்.

அ) குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழலமைவில் நிலவும் இரண்டு வேறுபட்ட மொழிகளைச் சார்ந்த இரு வேறு படைப்புகளை,

அவற்றினிடையே நிலவும் ஒற்றுமை, வேற்றுமை மற்றும் தாக்கங்களை (influences) அறிவதற்காக, ஆராயும் படிப்பே ஒப்பிலக்கியம் ஆகும்.

சான்றாகத் தமிழ் மற்றும் வங்காளி மொழிகளை ஒப்பிடுவதைக் கொள்ளலாம். இவற்றிற்குரிய பண்பாட்டுச் சூழலமைவுகளாகக் குடும்பம், விதவை நிலை, குழந்தை மணம், புரட்சி என எந்தவொரு சூழலையும் எடுத்துக் கொள்ளலாம். விடுதலைக்கு முன் / பின் என்ற வரலாற்றுச் சூழலையும் பண்பாட்டுச் சூழலமைவில் கொள்வதில் தவறில்லை. குறிப்பிட்ட ஆசிரியர்களை (பாரதி - தாகூர்) ஒப்பிடுவதையும், குறிப்பிட்ட படைப்புகளை ஒப்பிடுவதையும் (கண்ணன் பாட்டு - கீதாஞ்சலி) கொள்ள வேண்டும்.

இந்தப் பொது வரைவிலக்கணத்தின் உட்பிரிவுகளாகக் கீழ்க்கண்ட மூன்று பிரிவுகளைக் கருத வேண்டும்.

அ. 1. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேசிய இலக்கியங்களை ஆராயும் படிப்பு ஒப்பிலக்கியம் எனப்படும்.

எ. டு. 1. **ஜெர்மன் + பிரெஞ்சு**
2. **ஜெர்மன் + போலிஷ் + ரஷியன்**

பொது வரைவிலக்கணத்தில் சொல்லப்பட்ட பண்பாட்டுச் சூழலமைவுகள் எல்லா உட்பிரிவுக்கும் பொது/ பொருந்தும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அ 2. ஒரே தேசியத்தைச் சார்ந்த பல்வேறு மொழிகளின் இலக்கியப் படைப்புகளை ஆராயும் படிப்பு ஒப்பிலக்கியம் ஆகும்.

எ.டு. 1. **தமிழ் + மலையாளாம்**
2. **தமிழ் + கன்னடம் + இந்தி**
3. **ஆங்கிலம் + பிரெஞ்சு (கனடா தேசியம்)**
4. **மலாயா + தமிழ் + சீனம் (மலாயா தேசியம்)**

அ 3. குறிப்பிட்ட மொழி சார்ந்த ஆனால் பல்வேறு தேசியங்களைச் சார்ந்த இலக்கியப் படைப்புகளை ஆராயும் படிப்பு ஒப்பிலக்கியம் ஆகும்.

எ.டு. 1. **உருது → இந்தியா, பாக்கிஸ்தான்**
2. **வங்காளி → இந்தியா, வங்காள தேசம்.**

3. ஆங்கிலம் → இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஆப்ரிக்கா, இந்தியா

ஆ. குறிப்பிட்ட ஒரு படைப்பையோ படைப்பாளியையோ பிற கலைகளுடனோ சமூக அறிவியல் அறிவுத் துறைகளுடனோ ஒப்பிட்டு ஆராயும் படிப்பு ஒப்பிலக்கியம் எனப்படும்.

எ. டு.

1. கல்லுக்குள் ஈரம் (ர.சு. நல்லபெருமாள் நாவல்) + திரைப்படம் (காந்தி, அகிம்சை, வன்முறை, புரட்சி குறித்த படங்கள் ) ஹே ராம்!
2. ஜெயகாந்தன் + சமூகவியல் /மார்க்சியம்.
3. பாமா + தலித்தியம் + பெண்ணியம்.
4. பெண்ணியம் + வீடு (தமிழ் நாவல்) + பொம்மை வீடு (ஜெர்மன்).
5. அறவியல் (ethics) + டால்ஸ்டாய் + காண்டேகர்.

இந்தக் கட்டுரையில் ஒப்பிலக்கியத்தின் நோக்கம், இன்றியமையாமை, வரைவிலக்கணம் என்ற அடிப்படையில் ஒப்பிலக்கியக் களங்கள் சுட்டப்பட்டன. இவையே இன்றி, ஒப்பாய்வுக் களங்களுக்கான, அல்லது களங்களை உருவாக்குவதற்கான சில அடிப்படைக் கூறுகள் மட்டும் இந்தப் பகுதியில் சுட்டிச் செல்லப்படுகின்றன. எந்தவொரு கூறையும் எடுத்து ஒப்பிடும் போதும் மேலே கட்டுரையில் கூறப்பட்டுள்ள அனைத்துப் பொது விளக்கங்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒப்பாய்வுக் களங்களுக்கான பொது அடிப்படைகளைப் (bases) பரந்த நிலையில் ஐந்து பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம்: ஊர்ப்புறம் 'rural' நகர்ப்புறம் 'urban' ஆளுமை 'personalities' பால், பாலினம் மற்றும் திருமணம் 'Sex, gender and marriage' குழந்தைகள் children.

களங்கள் பற்றிய இப்பிரிவுகள் இறுகிய ஒன்றல்ல; சுருக்கவும் விரிக்கவும் தக்கன. இனி, இந்த ஐந்து பிரிவுகளுக்குள் அடங்கும் உட்பிரிவுகளைச் சுட்டலாம்.

**1. ஊர்ப்புறம்**

1. நிலப்பிரபு குத்தகைதாரர் / உழவர் உறவுகள், 2. உழவர் மீதான பொருளியல் சமுதாயச் சுரண்டல்கள், 3. தீண்டாமை, 4. ஊர்ப்புற வாழ்வும்

அரசியலும், 5. பெண்கள், 6. இயற்கைப் பேரழிவும் ஊர்ப்புறமும், 7. ஊர்ப்புற வாழ்வின் தொடர்ச்சியும் மாறுதல்களும் (முதலாளித்துவம், நகரமயம், கூட்டுக்குடும்பம்....), 8. பல்வேறு சமுதாய - தொழிற் குழுவினர் - மீன்பிடிப்போர், தோட்டத்தொழிலாளர், பழங்குடி வாழ்க்கை; தலித் - பறையர், பள்ளர், அருந்ததியர்.

## 2. நகர்ப்புறம்

9. நகரம், நகரமயமாக்கம், தொழில் மயம் மற்றும் இவற்றின் பாதிப்புகள் 10. சேரி, குடிசை (slums) வாழ்க்கை, 11. கூட்டு/ தனிக் குடும்பங்களும் வீட்டுவசதிப் பிரச்சனைகளும், 12. வேலையில்லாத் திண்டாட்டம் - தனிநபர் மற்றும் குடும்பச் சீரழிவுகள், 13. வர்க்கப் போராட்டம், 14. மாணவர், 15. அரசியல்வாதி, அதிகாரி, கிரிமினல்கள், காவல்துறை, 16. மரபும் மாற்றங்களும், 17. நகரம் / பெருநகரம் - ஆண் பெண் உறவுகள்.

## 3.ஆளுமை

18. நிலப்பிரபு, 19. விவசாயி, 20. நிலமற்றவர், 21. லேவா தேவி, 22. தீண்டப்படாதோர், 23. காந்தியவாதி, 24. மார்க்சியவாதி, 25. இக்கால மனிதர், 26. மனிதம் பிறழ்ந்த மனிதன் (de-humanised man), 27. எதிர்ப்பாளனும் புரட்சியாளனும் (rebel 2 revalutionary), 28. அரசியல்வாதியும் அதிகாரியும், 29. தாய், 30. மரபுப் பெண், 31. இக்காலப் பெண், 32. வேலைக்கும் போகும் பெண், 33. முதிர் கன்னியர், 34. விதவை, பாலியல் தொழிலாளர்.

## 4. பால், பாலினம், திருமணம்

36. பாலும் பாலினமும் (sex and gender), 37. திருமணத்திற்கு முந்திய பிந்திய அப்பாற்பட்ட பாலுறவுகள், 38. ஏற்பாட்டு / காதல் திருமணங்களும் திருமணம் என்ற நிறுவனச் சரிவும் / சீரழிவும் / மாற்றமும், 39. குடும்பத்தில் கணவன் மனைவி பாலுறவுப் பிரச்சனைகள், 40. மணவிலக்கும் மறுமணமும், 41. மூன்றாவது நபரின் தாக்கங்கள் - காதலன், ஆசைநாயகர், பெற்றோர், மாமனார் / மாமியார், உடன் பிறந்தோர், நண்பர்...

## 5. குழந்தைகள் / சிறுவர்

42. அநாதைக் குழந்தைகள், 43. அகதிக் குழந்தைகள், 44. ஒரு பெற்றோர் குழந்தைகள், 45. மாற்றுத் திறனாளிகள், 46. மனப் பிறழ்ச்சியர்,

47. தெரு வாழ் சிறுவர், 48. குழந்தைத் தொழிலாளர், 49. பாலியல் தொழிலாளர், 50. சிறையிலடைக்கப்பட்ட சிறுவர், 51, இளஞ்சிறார் இல்லச் சிறுவர்.

ஒப்பிலக்கியக் களங்கள் என்னும் இந்தக் கட்டுரையில் ஒப்பிலக்கியம் என்னும் இலக்கியத் திறனாய்வு / அறிவுத் துறையின் புரிதலுக்கான முயற்சிகளும் அதை வரைவிலக்கணப் படுத்தலுக்கான முயற்சிகளும், இவற்றின் அடிப்படையில் களங்களை விரித்துக் காட்டும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை, 'இவையே இறுதி' என்ற இறுக்கமான விளக்கங்களோ, பிரிவுகளோ அல்ல; ஆனால் பொது விதிகளை வரையறுக்க மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வாகும்! இலக்கிய வடிவங்கள், வகைமைகள் (genre), கோட்பாடுகள் என்ற அடிப்படைகளிலும் ஒப்பிலக்கிய ஆய்வு விரியத் தக்கது. எந்தவொரு விரிவுக்கும் பிரிவுக்கும் இந்தக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளவை பின்புலமாக அமைவது உறுதி.

## பொதுப் புரிதலுக்கான நூல்கள்

1. Comparative Literature, Amiyadev and Sisir Kumar Das, Indian Institute of Advanced Studies, Shimla.

2. Comparative Indian Literature, K.M. George (ed.), Sahitya Akademy, New Delhi.

3. India and World Literature, Abhai Mauria (ed.) Indian Council for Cultural Relations, New Delhi.

4. The History of Indian Literature, Maurice Winternitz, Tr.by V. Srinivasa Sarma, Motilal Banarsidass, Chennai.

5. ஒப்பியல் இலக்கியம், க. கைலாசபதி.

6. ஒப்பிலக்கிய அறிமுகம், தமிழண்ணல்.

7. ஒப்பிலக்கியம் – க. சச்சிதானந்தன்

நன்றி : அலிகர் முஸ்லீம் பல்கலைக்கழகத்தின் நவீன இந்திய மொழிகள் துறையில் 1999-2004 வரை ஐந்து கல்வியாண்டுகள், முதுகலை, வங்காள இலக்கிய மாணவர்க்கு, 'ஒப்பிலக்கியம்' பாடம் நடத்தும் வாய்ப்புக் கிட்டியது. கூரிய கேள்விகளால் என் படிப்பறிவைச் செழுமைப்படுத்திய என் மாணவச் செல்வங்களுக்கு என்றும் நன்றியன்.

# போதுமிந்த பெண்ணின் சென்மம் !

பாரதி பணிச்செல்வர்
கவிஞர் அ. கனகசபாபதி எம்.ஏ, பி.எட்., கள்ளக்குறிச்சி

கல்யாணம் ஆனவுடன் ஆண்கள் எல்லாம்
கண்ணென்றும், மணியென்றும், தேனே என்றும்
சொல்லிசொல்லி கொஞ்சுவார்கள் பெண்ணை நித்தம் !
சொக்காத மனதையெல்லாம் சொக்க வைப்பார் !
புல்லரிக்க வைத்திடுவார் மேனி யெங்கும் !
'போகிக்கும்' கருவியாக பெண்ணை மாற்றி,
நல்லயிரு பிள்ளைகளை பெற்ற பின்னே
'நாயினும்' கேடாக மதிப்பார் பெண்ணை !

பெண்ணடிமை நீங்கவேண்டும் நாட்டில் என்று
பெரியாரின் பாரதியின் சொல்லைக் கேட்டு
பெண்களென்றும் நாட்டினது கண்கள் என்றார்;
பெண்களினால் ஆதாயம் கூடு தற்கு !
கண்துடைப்பாய் பெண்களையும் படிக்க வைத்தார்!
கருத்தாக வேலைக்கும் அனுப்பி வைத்தார் !
கண்கொத்தி பாம்பைப்போல் ஊதி யத்தை
கவருவதில் நாட்டமாக இருக்கின்றார்கள் !

முப்பத்தி மூன்றுசதம் அளித்தால் கூட
முழுமையான ஆதாயம் பெண்ணால் கொள்வார் !
எப்போதும் "போகிக்க பொங்க வும்"தான்
எங்களையே ஆணினத்தார்நடத்தி வாழ்வார்!
எப்போதும் பெண்ணடிமை தீரா திங்கே!
எந்தவேலை செய்துவிட்டும் வீடு வந்தால்
அப்போதும் 'அடுப்புவேலை' காத்திருக்கும் !
அப்பப்பா "போதுமிந்த" பெண்ணின் சென்மம்!

# சுற்றுச் சூழல் பாதுகாப்பில் தனிமனித முயற்சி

சி. பாண்டுரங்கன்

*தூய வளிநீர்மண் தூஉம் மழைமரம்*
*ஆய அமைதி தரும்.* - *சி.பா.*

இனிய உலகிற்கு இறைவன் தந்த கொடைகள் பஞ்ச பூதங்கள் எனப்படும் ஐம்பொருள்கள்; மண், நீர், நெருப்பு, காற்று, விண்.

மனிதன், உடல் தூய்மையில் காட்டும் ஆர்வத்தை, மனத்தூய்மையில் காட்டுவதில்லை. அதன் தேவையை வலியுறுத்தித்தான் அய்யன் திருவள்ளுவர்,

*''உடல்தூய்மை நீரான் அமையும் மனந்தூய்மை*
*வாய்மையால் காணப் படும்''* என்றார்.

இம்மனத்தூய்மை வழிகளைத் தான் அனைத்துச் சமயங்களும், அவனிக்கு எடுத்துரைக்கின்றன.

அதுபோலவே, வீட்டைத் தூய்மையாக வைத்திருக்கும் பெரும்பான்மையானவர்கள், அதே அக்கறையை நாட்டின் சுற்றுச் சூழல் தூய்மையில் தற்போது செலுத்துவதில்லை.

*''மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்*
*காடும் உடையது அரண்''*

என, மனிதனுக்குப் பாதுகாப்பு தருவனவற்றைப் பகர்ந்தார் பைந்தமிழர் திருவள்ளுவர். அந்த நீர்வளம், மண்வளம், இயற்கை அமைப்பு வளம், காட்டு வளம் காத்தல் நமது கடமை.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் நம் முன்னோர்கள் எவ்வளவு கவனம் செலுத்தினார்கள் என்பதை, சிந்துச் சமவெளி நாகரீகம் உணர்த்தும். மொகஞ்சதாரா ஆரப்பா புதைபொருள் ஆய்வு உண்மைகள் வழியும், காஞ்சிபுரத்தின் நகர அமைப்பினைப் பாராட்டிச் சீன வழிப்பயணி, யுவான்

சுவாங் குறிப்பெழுதியுள்ளார் எனும் வரலாற்றுண்மை வழியும் நாம் உய்த்துணரலாம். கழிவு நீரெல்லாம் செல்லும் உறை நீர்க்கால்கள் (சலதாரைகள்) அக்காலத்திலேயே சர்வ சாதாரணம்.

சிற்றூரில் தனி மனிதன் வசதியின்மையினால், குளியலறை நீரைக் குழியில் தேங்க விடுவதை இன்றும் காணலாம். இக்குறையினை மிகக் குறைந்த முயற்சியில் சரி செய்ய இயலும்.

நீர்க்குழியைச் சுற்றி வாழை மரங்கள் வளர்க்கலாம். மேலும், தைல மரத்தை அங்கு வளர்த்தால், மிகை நீர் மரத்தின் வழி காற்றில் கலந்து, காற்றின் தூய்மை காக்கப்படும்; மண்ணின் தூய்மையும் மேம்படும்.

தெருவாசல் பெருக்கும்முன், தண்ணீர் தெளித்து, பின்னர் பெருக்கும் பெண்மணி, காற்றுத்தூய்மை காத்து உதவுகிறார். ஆழ்துளை வழி நிலத்தடி நீரை உறிஞ்சும் இயந்திரங்களை அமைப்பவர்கள், ஒலி மாசு உருவாக்காத தரமானவற்றை அமைக்க வேண்டும். ஏனென்றால், இதில் நமக்குள்ள உரிமை, பிறர் நலம் கண்டு கொள்ளாததாக இருக்கக் கூடாது. ''நீ கைத்தடியை வீசி நடக்கும் உரிமை, மற்றொருவரின் மூக்கு நுனிக்கு முன்னாலேயே முடிந்து விடுகிறது'' என்றார் வின்ஸ்டன் சர்ச்சில்.

தூசும், ஒலி மாசும் தடுக்கும் மரங்களை – மழை தரும் வரங்களை – நிரம்ப வளர்க்க வேண்டும். மண் மாசு உருவாக்காத புதிய வகைப் பயன்பாட்டுப் பொருள்களை, அறிவியலார் கண்டறிய வேண்டும்.

குளிர் பதனச் சாதனங்களில் பயன்படும் ''குளோரோ புளோரோ கார்பன்'', வளி மண்டல ''ஓசோன் கமழி அடுக்கை மண்டலத்தைப் பழுதாக்குவதாக, அறிஞர்கள் எச்சரிக்கின்றனர். எனவே, இதன் பணியை, இதை விடச் சிறப்பாகவும், இத்தீங்கு விளைவிக்காமலும் செய்யக்கூடிய ஒரு புதிய பொருளைக் கண்டறிந்து, அறிவியல் உலகம் அவனிக்கு அளிக்க வேண்டும். அதுவரை, இப்பொருளை எச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும்.

மிகுமாசு, எரிபொருளால் விளைவிக்காத வண்டிகளுக்கு எல்லாத் தரப்பிலிருந்தும் வரவேற்பு கிடைப்பது ஒரு நன்னம்பிக்கையின் அறிகுறி.

*''உண்டால் அம்ம இவ்வுலகம்....*
*தமக்கென முயலா நோன்தாள்*
*பிறர்க்கென முயலுநர் உண்மையானே!* – புறநானூறு

சுத்தம் சுகம் தரும் ! சுற்றுச் சூழல் பாதுகாப்போம் ! சுகம் பெறுவோம் !

# செய்தி ஊடகங்களும் மொழி பெயர்ப்பும்

## விளம்பரங்களில் ஒலிபெயர்ப்பு

*முனைவர். வீ. ரேணுகா தேவி*
மதுரை

மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. அவ் ஊடகங்களின் வழியாக வெளியிடப்படும் விளம்பரங்கள் இன்று ஒரு தனி இலக்கிய வகையாக வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது. விளம்பரங்களில் பயன்படுத்தப்படும் மொழியானது மரபுகளை மீறி வரும் புதுக்கவிதையைப் போல பொதுத் தமிழிலிருந்து வேறுபட்டு புது வகை மொழியாக அமைந்துள்ளது.

பெருன்பான்மையான விளம்பரங்கள் நேரடியாகத் தமிழ் மொழியில் தயாரிக்கப்படுவதில்லை. இந்தி, ஆங்கிலம் போன்ற வேற்று மொழிகளில் தயாரிக்கப்பட்டு தமிழ்மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்யப்படுகின்றன. அவ்வாறு தமிழ் மொழியில் மொழி பெயர்க்கும் பொழுது அவ்விளம்பர மொழியில் பெரும்பாலானச் சொற்கள் ஒலிபெயர்க்கப்பட்டு எழுதப்படுகின்றன. சில ஆங்கிலச் சொற்கள் அப்படியே ஆங்கிலத்தில் எழுதப்படுகின்றன.

"Tang அயர்னின் ஊட்டம் மற்றும் அற்புதமான சுவை'' மேற்காட்டப்பட்ட விளம்பர வாக்கியத்தில் 'Tang' என்னும் பெயர்ச்சொல் ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு என்னும் சொல் ஒலிபெயர்க்கப்பட்டு 'இன்' என்னும் தமிழ் பின்னொட்டுடன் இணைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக ஊடகங்கள் வழி வெளியிடப்படும் விளம்பர வாசகங்களில் மொழிபெயர்ப்பும், ஒலிபெயர்ப்பும் ஆங்கில வரிவடிவச் சொற்களுமாக கலந்தே இருக்கின்றன. இக்கட்டுரை தமிழ் விளம்பரங்களில் காணப்படும் ஒலிபெயர்ப்பு பற்றியும்,

ஒலிபெயர்ப்பினைப் பயன்படுத்துவதால் தமிழ் மொழியின் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் ஆராயும் விதமாக அமைந்துள்ளது.

ஊடகங்களில் வரும் விளம்பரங்களில் தமிழ்ச் சொற்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் ஆங்கிலச் சொற்களே அதிகம் இடம்பெறுகின்றன. இவ் ஆங்கிலச் சொற்கள் சில இடங்களில் வரிவடிவத்திலும் சில இடங்களில் ஒலிபெயர்க்கப்பட்டு தமிழ் வரிவடிவத்திலும் அமைந்துள்ளன.

புதிய Sunfeast மாரிபைட்

சக்தி Viewer's Contest -ல் கலந்து கொள்ள வாருங்கள்

புதிய Nimbooz அஸ்லி லெமன் ஃப்ளேவர்

இந்நாளில் புதிது புதிதாக எண்ணற்ற பொருள்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன, உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றிற்கு உடனடியாகத் தமிழில் பெயரிட்டு வழங்க முடியாத பொழுது ஒலிபெயர்ப்பே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.

பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குவது அம்மொழியின் சிறப்பு ஒலிகளை மொழிபெயர்க்கப்படும் மொழியில் அவ்வாறே எழுதுவது ஒலிபெயர்ப்பாகும் என்பர்.

மூலமொழிச் சொற்களை பெயர்ப்பு மொழியின் ஒலி அமைப்புகளிலேயே எழுதுவது ஒலிபெயர்ப்பு ஆகும். இம்முறை மொழிபெயர்ப்பு செய்ய இயலாத பொழுது அதற்கு ஒரு தீர்வாக அமைகின்றது. ஆனால் விளம்பரங்களில் மொழிபெயர்க்க இயலும் சொற்கள், அதாவது மூலமொழிச் சொற்களுக்கு நிகரான சொற்கள் பெறு மொழியில் இருந்தாலும் அவற்றைப் பயன்படுத்தாது மூலமொழிச் சொற்களையே ஒலிபெயர்த்து எழுதும் போக்கு விளம்பரங்களில் அதிகம் காணப்படுகின்றது.

| | |
|---|---|
| *கல்யாண் சாரீஸ்* | *கல்யாண் சேலைகள்* |
| *கோல்கோட் டுத்பேஸ்ட்* | *கோல்கோட் பற்பசை* |
| *ஹேர் ஃபாலுடன்* | *முடி உதிர்தலுடன்* |
| *வேறுயாரும் எங்களைவிட* | *வேறுயாரும் எங்களைவிட* |
| *சிறப்பாக போரிடுவதில்லை* | *சிறப்பாக போரிடுவதில்லை* |

| | |
|---|---|
| *பிளாட்டினம் லவ் பாண்ட்ஸ்* | *பிளாட்டினம் அன்பு இணைப்பு* |
| *உயர்தர ஸ்கின் சிகிச்சை* | *உயர்தர தோல் சிகிச்சை* |
| *மூலம் உங்கள் தோலின்* | *மூலம் உங்கள் தோலின்* |
| *நிறத்தை கலர்ஃபுல்லாக மாற்ற* | *நிறத்தை பளபளப்பாக மாற்ற* |
| *கல்யாண் ஜுவெல்லர்ஸ்* | *கல்யாண் நகைகள்* |
| *உங்கள் மொபைல்களில்* | *உங்கள் கைபேசிகளில்* |
| *ஜோயாலுக்காஸ் வழங்கும்* | *ஜோயாலுக்காஸ் வழங்கும்* |
| *ஈஸி கோல்டு சேமிப்புத் திட்டம்* | *எளிமையான தங்கம் சேமிப்புத் திட்டம்* |

ஆங்கிலச் சொற்களுக்கு இணையான எளிய தமிழ் மொழிச் சொற்கள் இருந்த போதிலும் பெரும்பாலான விளம்பரங்களில் ஒலிபெயர்ப்புச் சொற்களைப் பயன்படுத்தும் நிலை காணப்படுகின்றது. அவ்வாறு ஒலிபெயர்க்கும் பொழுது பெறு மொழியின் மொழி மரபுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால் பெரும்பாலும் ஒலிபெயர்க்கும் பொழுது விளம்பரங்களில் தமிழ் மொழியின் மரபுகள் மீறப்படுவதைப் பார்க்க இயலுகின்றது.

தமிழ் இலக்கண நூல்கள் குறிப்பிடும் தற்சமம், தற்பவம் ஆகியவற்றை இன்றைய மொழியியலார் 'தன் ஒலி ஆக்கம்', ஒப்பொலியாக்கம் என்று குறிப்பிடுகின்றனர்.

## தன் ஒலி ஆக்கம்

மூல மொழிக்கும் பெறு மொழிக்கும் பொதுவாக உள்ள ஒலிகளைக் கொண்டு சொற்களைப் பெயர்த்து எழுதுதல் தன் ஒலி ஆக்கம் எனப்படுகின்றது.

Loal Calls - லோக்கல் கால்கள்

Aswini Hair Oil - அஸ்வினி ஹேர் ஆயில்

Fiama Di wills - பியாமா டி வில்ஸ்

Sweet - சுவீட்

## ஒப்பொலியாக்கம்

மூலமொழியிலுள்ள சொற்களைப் பெறுமொழியின் இயல்புக் கேற்பத் திருத்தியும் மாற்றியும் அமைத்து எழுதுதல் ஒப்பொலியாக்கம் எனப்படுகின்றது.

Focus - ஃபோகஸ்

Flask - பிளாஸ்கு

பொதுவாக, அறிவியலில் பயன்படுத்தப்படும் அளவைகள், முதலெழுத்துக்கள், நிலை பெற்றுவிட்ட பெயர்ச் சொற்கள் போன்றவற்றை ஒலிபெயர்ப்பது ஏற்புடையது.

லக்ஸ், ரின், டெயட்டோ, பீட், செவர்லெட், காம்ப்ளான், விவா, மெர்க்கன்டைல் பேங்க், கெல்வினேட்டர், கோல்கேட், பெப்ஸோடன்ட், சிபாக்கா, ஏ.வி.டி, டி.வி.எஸ், வி.ஐ.பி. (பாட்டா) போன்றவை பெயர்ச்சொற்கள் சுருக்க எழுத்துக்கள் ஆகும். இவற்றை மொழிபெயர்க்க இயலாது. எனவே ஒலிபெயர்த்து எழுதலாம். அதே போன்று ஏற்கனவே வழக்கிற்கு வந்து அறிமுகமாகிவிட்ட சிமெண்டு, பல்பு, பெட்ரோல், டீ, காப்பி போன்ற பிறமொழிச் சொற்களை அப்படியே பயன்படுத்தலாம்.

சிமெண்டு, பல்பு, பெட்ரோல், டீ, காப்பி கட்டாயம் ஒலிபெயர்க்க வேண்டிய சொற்களை மட்டுமல்லாது விளம்பரங்களில் அதிகமானச் சொற்களை ஒலிபெயர்ப்பு வடிவில் மொழிபெயர்க்கும் போது பல்வேறு சிக்கல்கள் தோன்றுகின்றன. அவற்றில் சில தமிழில் மொழி முதலில் வராத எழுத்துக்களும் மொழி முதலில் இடம் பெறுகின்றன.

*டகரம் மொழி முதலாகாது*

டயர், டாக்டீலர், டேப் ரெக்காடர், டைனமிக், டொமேட்டோ சாஸ்

*ரகரம் மொழி முதலாகாது*

ரசனை, ரசனா, ரின், ருசி, ரெப்ரிஜிரேட்டர், ரைஸ் சேவை

*லகரம் மொழி முதலாகாது*

லக்ஸ், லிப்டன், லீவர், லூபிரிகேட், லிரில் டால்க்

மூன்று மெய்கள் இணைந்து அமைவது தமிழ் மொழியில் இல்லை. ஆனால் ஒலிபெயர்ப்புச் சொற்களில் மூன்று மெய்கள் இணைந்து வருவதைக் காணலாம்.

ஆண்டிஸெப்டிக், எலெக்ட்ரானிக்ஸ், மிக்ஸர், எக்ஸ்போர்ட், எக்ஸ்ரே, பிரிண்ட்டட் சேதி

நான்கு மெய்கள் இணைந்து வருவதையும் ஒலிபெயர்ப்புச் சொற்களில் காணமுடிகின்றது.

கோல்ட்ஸ்பாட், டிரான்ஸ்ப்பார்மர், அமுல் ஸ்ப்ரே, இன்ஸ்ட்ரூமெண்ட்

ஆயுதமும், மெய்யெழுத்தும் மொழிக்கும் முன் வரா என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் விளம்பரங்களில் இவ்விதி மீறப்பட்டுள்ளது.

*ஃபேர் அண்ட் லவ்லி*

*ஃபில்டர் காபி*

*ஃபென் டாஸ்டிக்*

*க்ரீம், க்ரெனன், ட்யூட்டி, த்ரீரோஸஸ் டீ, ப்ராப்ளம்*

ஒலிபெயர்ப்புச் சொற்கள் ஒரே மாதிரியாக ஒலிபெயர்க்கப் படுவதில்லை. ஒலிபெயர்ப்பில் உறழ்ச்சி காணப்படுகின்றது.

| | |
|---|---|
| Camera | கேமரா / காமரா |
| Battery | பேட்டரி / பாட்டரி |
| Vitamin | விட்டமின் / வைட்டமின் |
| Tosibha | தோஷிபா / டோஷிபா |
| Shirting | ஷர்ட்டிங் / சர்ட்டிங் |
| Coffee | காபி / காப்பி |
| Sandwitch | ஸான்விச்சு / சாண்ட்விச்சு |
| Switch | ஸ்விட்ச் / சுவிட்ச் |
| Cement | சிமெண்ட் / சிமிண்ட் |
| Bank | பாங்க் / பாங்கு / பேங்கு |
| Powder | பௌடர் / பவுடர் |
| Bulb | பல்ப் / பல்பு |

Herbal — ஹெற்பல் / ஹெற்பெல்

Caramilk — கேரமில்க் / காரமில்க்

ஆங்கிலச் சொற்களை ஒலிபெயர்த்து எழுதும் பொழுது அதற்கு இணையான சொற்கள் மூலமொழியிலும் இருந்தால் பொருள் மயக்கம் ஏற்படலாம்.

*ஹேர் பாலுடன்*

paal — Fall - Eng. / Milk - Tam.

*மோர் இம்பூர்வ்ட் அஸ்வினி ஹேர் ஆயில்*

*உள்ளம் விரும்புதே மோர்*

*மோர்*

moor — More - Eng. / Buttermilk - Tam.

*பவுடர் யூஸ் பண்றது காமன் சென்ஸ்*

kaaman — Common - Eng. / Cubid - Tam.

*மாரி பட்*

*மாரி*

maari — Marie - Eng. / Maari - Tam.

*கால்களை எடுக்க முடியவில்லையா?*

*லோக்கல் கால்கள்*

Kaal — Call - Eng. / Leg. - Tam

ஆங்கிலத்தில் வெவ்வேறு சொற்களாக இருப்பவை தமிழில் மொழிபெயர்ப்பு செய்யும் போது ஒரு வடிவமாக அமைந்துள்ளன.

Saree
Sorry
→ caari

Rise (Sunrise) Eng.
Rice (pasumathi arici) Tam
→ raise

Gas - Eng.
Money - Tam.
→ kees

ஒவ்வொரு பைட் டிலும்

பைட் Bite - Eng.
Fight - Tam.
→ pait

கண்களில் நோ மோர் டியர்ஸ்

டியர் Tear - Eng.
Dear - Tam.
→ tiyar

( தொடர்ச்சி அடுத்த இதழில் )

# வாசகர் வாசகம்

1

அன்பு நிறை ஐயா, வணக்கம்.

சரியான தேதியில் தொடங்கும் பருவமழை போல், 29.4.2011இல் செந்தமிழ் வந்தது. கல்லூரி விழாக் காட்சி முதலாக, வாசகர் வாசகம் வரை, அனைத்தும் நன்று. எனினும், இரண்டு பக்கங்களைக் கவிதைக்கும் ஒதுக்கீடு செய்திருந்தால், பொன்மலர் நன்மணமும் பெற்றதுபோல் இருந்திருக்குமல்லவா? அன்புடன் ஏற்றுக் கொள்ளுங்கள்.

2

அன்பிற்கினிய பெருந்தகையீர், வணக்கம். வாழ்க நலமே.

செந்தமிழ் மே இதழ் உள் அட்டை படச்செய்தி கண்டு மகிழ்ந்தோம். பெருமைமிகு முகவை மன்னர் திரு நா.குமரன்சேதுபதி அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு, தங்களுடன் இணைந்து, செந்தமிழ் வாசகர்களும் நல்வாழ்த்துகள் கூறுகின்றோம்.

"வாழ்க பல்லாண்டு பல்லாண்டு !

சங்கத் தமிழ்வளர்த்து வாழ்க வாழ்க !"

மே இதழின் 2 கவிதைகள், 6 கட்டுரைகள் நன்று ! இதழ் மணத்தில் திரு முனைவர் க.சி. அவர்கள் குறிப்பிட்டது போல், திருமந்திரம்.... கட்டுரை வெற்றிதான்; பா. 266 உரை விளக்கம் நூலை வாங்கத் தூண்டுகிறது !

உவமை விளக்கக் கட்டுரையில் தொல். 272 தண்டி. 31, மிகவும் பொருத்தம்; இனிவரும் உவமை விளக்கக் கட்டுரைகளுக்கும் முன்னுரையாகக் கொள்ளத்தகும்.

தொல். அரசியல்..... கட்டுரையில், "வெற்றி கொண்டாடப் பெறினும், ஒருவர் நாட்டை மற்றவர் கவர்ந்து கொள்வதில்லை" என்னும் கருத்து, உள்ளம் உவகை கொள்ளுமாறு உரைக்கப்பட்டுள்ளது !

அகநா.... கட்டுரையில், "வெண்ணிப் பறந்தலை" சொல் விளக்கம், மிக நன்று !

கோவை திரு இரா.சொ.இராமசாமி அவர்களின் பெயர்முன் அடை, தமிழ்ப் பற்றுமிக்க சீத்தலைச்சாத்தனாரை நினைவூட்டுகிறது ! வேந்தர் எழுச்சிப்பாச்சுவை நன்று !

இனி பக்கம் 2 தலைப்பை, "உள்ளுறை" என அமைக்கலாமே !

சங்கத்தில் பயின்ற மாணவன்

**சி. பாண்டுரங்கன்**

# ஆசிரியர் குழு


திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா



தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 July 2011 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

**2011 - 2012ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது**

- ✦ இளம் இலக்கியம்
- ✦ இளங்கலை
- ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர்
- ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

| இரா. அழகுமலை | முனைவர் மு. மீனா | இரா. குருசாமி |
|---|---|---|
| செயலாளர் | முதல்வர் (பொறுப்பு) | செயலாளர் |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | செந்தமிழ்க் கல்லூரி | செந்தமிழ்க் கல்லூரி |

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.